Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 21 ஜூலை 2016 கானம் : 12





Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை




வேணு : 21 ஜூலை 2016 கானம் : 12
Delivered by India Post www.indiapost.gov.in


ஜூன் 8 அருப்புக்கோட்டையில் பூமி பூஜை


ஜூன் 20 25 தஞ்சை ஸ்ரீநவநீதகிருஷ்ணன் கோவிலில்
உபன்யாசம் ராமானுஜம்ஜி




ஜூன் 19 மாலை வாலாஜாபேட்டை ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில்


ஜூன் 19 மாலை ராணிப்பேட்டையில் நாமகீர்த்தனம்



ஜூன் 18 மாலை விரிஞ்சிபுரத்தில் சத்சங்கம்



ஜூன் 19 காலை சோளிங்கரில் சத்சங்கம்





விர்ஜீனியா நாமத்வார்
திறப்பு – பூர்ணிமாஜி
மே 27





பூர்ணிமாஜியுடன் விர்ஜினியா சத்சங்கத்தினர்





அமெரிக்கா மற்றும் கனடா சத்சங்கங்கள் - பூர்ணிமாஜி





மே 26, 27 திருச்சி புதிய நாமத்வார் திறப்பு, சீதாகல்யாணம்





ஜூன் 6 விருதுநகர் நாமத்வாரில் சத்சங்கம்



ஜூன் 7 சிவகாசி கார்னேஷன் பள்ளியில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை









ஜூன் 9 தூத்துக்குடி நாமத்வார்





ஜூன் 7 தாயில்பட்டியில் சத்சங்கம்








ஜூன் 20 - 25
பகவத் கீதை பக்தி யோகம் உபன்யாசம்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
வளாக சீதாராம ஹால், பெங்களூரு



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 ஜுலை 2016 கானம்: 12

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-244 | 05 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 |
| உறைந்து போனேன் | 11 |
| பக்தி பயிர் வளர ... | 12 |
| ஸ்ரீராம நாம மருந்து | 14 |
| அமெரிக்காவில் புதிய நாமத்வார் | 17 |
| ரூபகோஸ்வாமி | 28 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 30 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 33 |
| சத்சங்க செய்திகள் | 36 |
| ப்ருந்தாவன கண்ணன் | 39 |


நாம் இறைவனை நேரில் காண்பதற்காக கீர்த்தனம், தியானம் இவைகளில் ஈடுபடும்பொழுது, எவ்வளவோ மஹான்களே பகவானை நேரில் காண்பதற்காக மிகவும் சிரமப்பட்டுள்ளார்கள்; நம்மால் அது எப்படி முடியும் என்று தளர்ச்சி அடையாமல், நம்மாலும் பகவானை பார்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன், குரு அருளை துணை கொண்டு முயல வேண்டும்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் - தர்பார் தாளம்: ஜம்பா

பல்லவி

நம்பி வந்தேனே சுந்தர ஆஞ்ஜநேய
உந்தன் சந்நிதிக்கு தஞ்சம் என்று நான் (நம்பி ..)

சரணங்கள்

ஓடி ஒளிந்து பயந்து வாழ்ந்த சுக்ரீவனின்
துயரங்களைத் துடைத்து அரசனாக்கியது நீயன்றோ!
(நம்பி ..)

கடலைக் கடந்து ஜானகியைக் கண்டு
மோதிரம் தந்து ஆறுதல் அளித்தது நீயே அன்றோ!
(நம்பி ..)

ஸஞ்ஜீவி பர்வதத்தை நொடியில் கொணர்ந்து
ராம இலக்ஷ்மணரையும் பாலித்ததும் நீயே அன்றோ!
(நம்பி ..)

அக்னி பிரவேசம் செய்யத் துணிந்த
பரதனை தடுத்து பாலித்தது நீயே அன்றோ!
(நம்பி ..)

தாப த்ரயங்களால் தள்ளாடிடும் எனையும்
அபயம் தந்து காக்க வேண்டியதும் நீயே அன்றோ!
(நம்பி ..)

_முன்அட்டை:_ ஜூன் 12, வைதீகஸ்ரீ பத்திரிக்கை சார்பாக தத்வலோகா ஆடிட்டோரியத்தில் "சந்தேக நிவாரணீ" ஒளித்தட்டு வெளியீடு. முதல் பிரதி ஸ்ரீஸ்வாமிஜியிடம் இருந்து பெறுபவர் முன்னாள் சீஃப் எலக்ஷன் கமிஷனர் திரு.டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, உடன் வைதீகஸ்ரீ பத்திரிக்கை ஆசிரியர் நன்னிலம் ப்ரும்மஸ்ரீ ராஜகோபால் கனபாடிகள், ப்ரும்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகள், ஸ்ரீகருணாகராச்சாரியார் ஸ்வாமி
_பின் அட்டை_- தில்லை சிதம்பரம் க்ஷேத்திரத்தில் நாமத்வார் திறப்பு, ஜூன் 5, 2016



# மதுரமான
# மஹனீயர் – 244

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஒவ்வொரு பக்தனுக்கும் தன் தெய்வம் எங்கு வாழ்ந்து லீலைகள் செய்ததோ, அங்கு சென்று தரிசித்து ஆனந்தப்பட ஆசை இருக்கும். ராம பக்தர் என்றால் அயோத்திக்கும், கிருஷ்ண பக்தர் என்றால் மதுரா, ப்ருந்தாவனத்திற்கும், சிவ பக்தர் என்றால் சிதம்பரத்திற்கும் செல்ல ஆசை இருக்கும். அவ்வப்பொழுது அங்கு சென்று தரிசித்து, ஆனந்தம் அடைவர். பகவான் அவதரித்த தலங்களில், இன்றும் சான்னித்யம் நிலவுவது மஹான்களின் கண்களுக்கு புலப்படுகிறது. ராமகிருஷ்ணருக்கு காசி க்ஷேத்ரம் முழுவதுமே பொன் போன்று, ஒளி மயமாக காட்சி அளிக்கிறது. காசியில் மரிக்கும் ஜீவர்களுக்கு, ஈசன் ராம நாமம் உபதேசிக்கும் காட்சியை பார்க்கிறார். பக்தமீராவின் சரித்திரம் மூலம், அவள் பார்க்கும் ப்ருந்தாவனமும், நாம் பார்ப்பதும் வேறுவேறு என்று தெரிகிறது. பண்டரிபுரம், துவாரகை, ப்ருந்தாவனம் போன்ற பல கிருஷ்ண லீலா தலங்களுக்கு, குருநாதர் சென்று நாமகீர்த்தனம் செய்து, ஆனந்திப்பார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதானே!

இதே போல், ஆதிசங்கரர் போன்ற பெரிய மஹான்கள் அவதரித்த காலடி போன்ற தலங்களிலும், இப்படி சான்னித்யம் நிலவுகிறது. சைதன்யரின் நவத்வீபம், நம்மாழ்வார் தவமிருந்த புளிய மரம், பண்டரி மஹாபக்த சாதுக்களாகிய துக்காராம், ஞானேஸ்வர் போன்றோர் சம்பந்தப்பட்ட தலங்கள், ராமகிருஷ்ணரின் காமார்புகூர், இப்படி பல இடங்களுக்கு பக்த ஜனங்கள் திரளாக சென்று, தரிசித்து, ஆனந்தப்படுவதை நாம் பார்க்கிறோம். மஹான்கள் வாழ்ந்த இடம், ஜனித்த பூமி என அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களையே, அவரவர்களின் சீடர்கள் மிக புனித தலமாக கருதுவர். குருவின் திருவடியே சீடனுக்கு கங்கை, காவிரி எல்லாமும். இது பாரத நாட்டில் தொன்று தொட்டு நிலவி வரும் பாரம்பரியம்.

தமிழகத்திலுள்ள கடலூர் நடுநாடு என்பதன் ஒரு பகுதி. 'நடுநாடு சான்றோருடைத்து' என்பதிலிருந்தே அதன்

பெருமை புரியும். நடுநாட்டின் சிறப்புக்களுக்கு எல்லையே இல்லை என்றால், அது மிகை இல்லை. அட்ட வீரட்டாணத்தலமும் இதில்தான் உள்ளது. தூப்புலில் அவதரித்த வேதாந்த தேசிகர் இங்குதான் வாழ்ந்தார். சமயக்குறவர்கள் நால்வரில், மூவர் இந்த நடுநாட்டை சேர்ந்தவரே. தென்பெண்ணை ஆற்றின் கரையை ஒட்டிய பகுதிகளுக்கு, அர்ஜுனன் திக்விஜயத்தின் பொழுது வந்துள்ளான். இங்குதான் திருவண்ணாமலை உள்ளது. இதில்தான், குகை நமசிவாயர், குரு நமசிவாயர், சேஷாத்ரி ஸ்வாமிகள், ரமண மஹரிஷிகள், யோகிராம்சுரத்குமார் என எத்தனை எத்தனை மஹான்கள் வாழ்ந்துள்ளனர்! அதற்கு அளவே இல்லை. இதில்தான், ஸ்வாமி ஞானானந்தர் வாழ்ந்த திருக்கோவிலூர் உள்ளது. ரகோத்தம ஸ்வாமிகளும், இங்குதான் இருந்தார். பக்த பிரஹலாதனை போலவே, கஷ்டங்களை இறைவன் நாமம் சொல்லி கடந்த அப்பர் சரித்திரம் சம்பந்தப்பட்டதும், இந்த தேசம்தானே. இப்படி பெருமை உடைய, நடு நாட்டிலுள்ள கடலூர்தான் நம் குருநாதரின் ஜன்ம ஸ்தலம். மதுரஸ்மரணத்தில் நாம் இதை விரிவாக கேட்டிருக்கிறோம் அல்லவா?

சமீபத்தில், விருதுநகர் சத்சங்கத்திலிருந்து ஒரு குழுவினர், கடலூரில் ஸ்ரீஸ்வாமிஜி வாழ்ந்த க்ருஹத்தை தரிசிக்க முடிவு செய்தனர். அவர்கள் வேனில் பயணிக்க முடிவு செய்தனர். அதில் ஒருவருக்கு, உடல்நிலை காரணமாக வேனில் பயணம் செய்ய முடியாத நிலை. ரெயிலில்தான் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். ரயிலில் செல்ல, எவ்வளவு ஆகும் என விசாரித்தார் அவர். சென்று வர, மொத்தம் ஆயிரம் ரூபாய் ஆகும் என்று தெரிய வந்தது. ஆயிரம் ரூபாய், சுலபமாக செலவழிக்க முடியாத குடும்ப சூழ்நிலை அவருடையது. தன் தோழியிடம், ‘செல்வதற்கு மிகவும் ஆசையாய் உள்ளது. ஆனால், என் நிலையில், இவ்வளவு பணம் செலவு செய்வது சரியா என யோசனையாகவும் இருக்கிறது’ என சொல்லி புலம்பி இருக்கிறார்.

தோழிகளோ, சத்சங்கத்திற்காக உண்மையாக செலவழிக்கப்படும் காலம், பொருள், உழைப்பு எதுவும்

வீணாகாதென பல மஹான்கள் சொல்லி உள்ளனரே என சொல்லி, அவரை அழைத்துள்ளனர். அவரும், தைரியமாக செல்வது என முடிவெடுத்தார். முடிவெடுத்தவுடன், அவருக்கு குருநாதர் ஜன்மஸ்தலம் செல்லப்போகிறோம் எனும் இன்ப உணர்வு தொற்றி கொண்டது. ஆனால், ரயிலில் வருகையிலும் அவர் மனதில் கொஞ்சம் இந்த உறுத்தலும், கூடவே குருநாதர் வாழ்ந்த இல்லம் தரிசிக்க உள்ளோம் என்ற பரவசமும் இருக்கத்தான் இருந்தது.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தாயார் பெயர், ஸ்ரீமதி சாவித்ரி ராஜகோபால். அவர் பெயரிலே, அவர் வாழ்ந்த க்ருஹம், ஸ்ரீமதி சாவித்ரி சதனம் என பெயரிடப்பட்டு, ஒரு நாமத்வாராக இயங்கி வருகிறது. கடலூர் வந்து மஞ்சக்குப்பத்திலுள்ள சாவித்ரி சதனத்தினுள், ஆவல் பொங்க, பூரிப்புடன், நாமகோஷமுடன் சத்சங்கத்தினர் சென்றனர்.

சற்று தயக்கமுடன் வந்திருந்த அந்த அம்மாளும் உள்ளே நுழைந்தார். மனதார சேவித்து மஹாமந்திர கீர்த்தனம் பாடினார். மனம் ஒளிமயமானதாக அவருக்கு தோன்றியது. அதனால் ஆனந்தம் பெருகியது. மனதில் இருந்த கேள்விகள், கலக்கங்கள், சிந்தனைகள் எல்லாம் நழுவி, பிரிந்து, அவிழ்ந்து நாமம் சொல்ல சொல்ல கரைந்தன. கண்களில் நீர்த்துளி முட்டியது. இந்த நிம்மதிக்கு என்ன விலை? பாரம் எல்லாம் பறந்து விட்டதோ! என்ன ஒரு இன்பம்! அடடா! இதனால்தான் பேரமைதியில்தான் ஆனந்தம் இலகுகிறது என பெரியோர் சொல்கின்றனரா!

பல்லாண்டு காலம் தவம் செய்தாலும் எந்த ஒரு நிம்மதியை மனம் விழையாதோ அதை அனாயசமாக குருவருள் தந்து விட்டதே! அந்த அளவு உணரும் சக்தி நம் மனதிற்கு இல்லை என்பதுதான் உண்மை.

விருதுநகர் திரும்பும்பொழுது, மனது திருப்தி அடைந்து விட்டது. ஆயிரம் ரூபாய் கூட செலவழிக்க முடியாத, நம் வீட்டு சூழ்நிலையை பற்றித்தானே நினைத்து வந்தோம். இந்த அனுபவம், எத்தனை கோடி ரூபாய் கொடுத்தால் கிடைக்கும்? என்றெல்லாம் அவருக்கு எண்ணங்கள் எழும்பி திக்குமுக்காட வைத்தன. இதனால்தான் பக்தர்கள் தாங்கள் வணங்கும்


தெய்வத்தை பொன்னப்பன், என்னப்பன் என்றெல்லாம் புகழ்கிறார்களோ!

இப்படி பலவிதமாய் ஆனந்தத்தை அசை போட்டபடி ரெயில் கம்பார்ட்மெண்டில் சென்று உட்கார்ந்தால், மற்றொரு இன்ப அதிர்ச்சி அவருக்கு காத்திருந்தது. முன்பதிவு செய்த அதே இடத்தில், வேறு நபர்கள் வந்து, அது தங்கள் இடம் என்றனர். இருவரின் பதிவு சீட்டும் சரியாக இருந்தது; இரண்டில் எது சரி? என்ன செய்வது? குருநாதரிடம் பிரார்த்தித்தவாறே, "சரி. டிக்கெட் பரிசோதகர் வரட்டும்" என்று இருந்தனர். அவர் வந்து டிக்கெட்டுகளை பரிசோதித்து விட்டு, புன்முறுவலுடன் இவர்களை மேல்பணம் எதுவும் வாங்காமல், ஏசி கோச்சில் உட்கார வைத்து விட்டார். அந்த சத்சங்க அன்பர், அதுவரை ஏசி கோச்சில் பயணித்ததே இல்லை. அந்த சௌகரியம், இப்பொழுது கேட்காமலே கிடைக்கிறது. இது தேகத்திற்கு சௌக்கியம். வரும்போது மனதில் சிந்தனைகள் பல இருந்தன. இப்பொழுது மனம் நிம்மதியாய் இருக்கிறது. மனமும் சரீரமும் குளிர்ந்து இருக்கிறது. இரண்டுக்கும் இதமான அனுபவங்கள்.

குருவையும் சத்சங்கத்தையும் நோக்கி, நாம் பயணத்தை தொடங்கினால், "இகதல்லி இஷ்ட உண்டு, பரதல்லி சுக உண்டு".

*கோபாலன் நமக்கு இந்த உடலை கொடுத்ததற்கு, அவனுடைய சன்னதியில், விழுந்து எழுந்து நமஸ்கரிப்போம். உண்ணும் உணவை மானசீகமாகவாவது, அவனுக்கு அர்ப்பணித்து விட்டு சாப்பிடுவோம். தினமும் முடிந்த அளவில், அவனுடைய நாமத்தை ஜபம் செய்வோம்.*

*- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: உலகத்தில் எவ்வளவோ பேர், நாமம் சொல்லாமல் இருக்கின்றார்கள். நீங்கள் மட்டும், யார் எந்த பிரச்சனையை சொன்னாலும், "நாமம் சொல்; கிடைக்கும்" என்கின்றீர்கள். "நாங்கள் மட்டும் ஏன் நாமம் சொல்ல வேண்டும். நாமம் சொல்லாமலே, எவ்வளவோ நபர்கள் நலமாக இருக்கின்றார்களே!"

பதில்: கல்யாணம் ஆன பல தம்பதிகளுக்கு, சகஜமாக குழந்தை பிறக்கின்றது. சிலருக்கு கல்யாணம் ஆகி, வெகுகாலம் ஆகியும், குழந்தை பிறப்பதில்லை. அவர்கள் அப்படியே விட்டு விடுவதில்லை. சிலர், ஜோதிட பரிகாரம் செய்து கொள்கின்றார்கள். சிலர், மருத்துவம் செய்து கொள்கின்றார்கள். பிறகு குழந்தை பிறக்கின்றது.

அதுபோல், இயற்கையாக நடக்க வேண்டிய ஒன்று, அவர்கள் வாழ்க்கையில் தடைபடுகின்றது. அதற்கு, ஏதோ ஒரு பாவம் தடுக்கின்றது. அந்த பாவம் போக, நாமம் சொல்ல சொல்கின்றேன். மேலும், அப்படி சொல்ல ஆரம்பித்த நாமம், உன்னை பிடித்து கொண்டாலும் நல்லது.

கேள்வி: எனக்கு எந்த கஷ்டமும் இப்பொழுது இல்லை. அப்படி என்றால் நான் இப்பொழுது நாமம் சொல்ல வேண்டாம் இல்லையா?

பதில்: குழந்தை பிறந்த உடன், அதற்கு எந்த வியாதியும் இல்லாதபொழுதும் கூட, பின்னால் நோய் வராமல் இருக்க, தடுப்பூசி போடுகின்றார்கள். அதுபோல், பின்னால் கஷ்டம் வராமலிருக்க, நாமம் இப்பொழுதே சொல்லி வைப்போம்.

கேள்வி: எனக்கு, பின்னாடி கஷ்டம் வரப்போவது இல்லை என்றால், நான் சொல்லும் நாமாவினால் என்ன பலன்?


பதில்: நாம் நன்றாக இருந்தாலும் கூட, உடல் ஆரோக்யத்தை உத்தேசித்து பல வைட்டமின் மாத்திரைகளை சாப்பிடுகின்றோம். அதுபோல், மனது ஆரோக்யமாக இருக்க, நிறைய நாமம் சொல்லி வருவோம்.

கேள்வி: நாமம் பகவானை பார்ப்பதற்காக இல்லையா?

பதில்: பகவானை பார்ப்பதற்காக என்றால், அந்த ஒரு ஆசையை மட்டும் முக்யமாக கொண்டு, வேறு எந்த ஆசையும் இல்லாமல், இரவு, பகலாக வருடக்கணக்கில், பலன் ஏற்படும்வரை சொல்லி வர வேண்டும்.

*உலகத்திலேயே நீதான் அதிகமாக மஹாமந்திர ஜபம் செய்தவனாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படு.*

*– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

# உறைந்து போனேன் -பத்மபாதர்

என்னுடைய அலுவலக நண்பர், என்னை சந்திப்பதற்கு வந்தார். அவர் என்னுடைய நீண்ட நாள் நண்பர். ஆகையால் அவர் குடும்ப விஷயங்கள் எல்லாம், என்னுடன் மனம் விட்டு பேசுவார். சமீபத்தில் அவர் தந்தை இறந்திருந்தார்.

அவர் தந்தை இறக்கும்பொழுது, என் நண்பரை அழைத்து, இருக்கின்ற மொத்த சொத்துக்களையும் மதிப்பிட்டு இரண்டாக பிரித்து, என் நண்பரையும் அவருடைய தம்பியையும் எடுத்து கொள்ள சொன்னாராம். நானும், "அது நியாயம்தானே, உங்களுடன் உடன்பிறந்தவர் உங்கள் தம்பி மட்டுமே; அப்படியே செய்து விட வேண்டியதுதானே; என்ன தயக்கம்?" என்றேன். அதற்கு அவர், "என் தம்பி நல்ல வேலையில் இல்லை. பிள்ளை குட்டிகளும் அதிகம்; அதனால் நான் என் சொத்தையும் அவனுக்கே கொடுத்து விடலாம் என்று உள்ளேன்" என்றார். இந்த காலத்தில் இப்படி ஒருவரா என்று ஆச்சரியப்பட்டேன்.

மேலும் அவர் தொடர்ந்தார், "அப்பா இருவரையும் சமபங்காகத்தான் எடுத்துக்கொள்ள சொன்னார்; 'நான்தான் எனக்கு வேண்டாம்; நீ கஷ்டப்படுகின்றாயே என்று அவனுக்கு விட்டு தருகின்றேன் என்ற விஷயம் தெரிந்தால்', அவன் வாங்கி கொள்ள மாட்டான். அவன் இதை விரும்ப மாட்டான். மானம் உடையவன்; மேலும் பிடிவாதக்காரன்" என்றார். "சரி; உங்கள் அப்பா, அவனுக்கே முழுவதையும் கொடுத்து விட சொன்னார் என்று ஒரு பொய்யை சொல்லி, அவனிடமே கொடுத்து விடலாமே" என்றேன். மேலும், நல்லதிற்கு பொய் சொன்னால் தவறில்லையே என்றேன். அவர் தொடர்ந்தார். "அப்படி செய்து விடலாம்தான். ஆனால் அதில் ஒரு சிக்கல்" என்றார். நானும் என்ன சிக்கல் என்றேன். "*அப்படி செய்து விட்டால், நான் இப்படி விட்டு கொடுத்ததை, யாரிடமும் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்ள முடியாதே! பிறகு என்னங்க பிரயோஜனம்*" என்றாரே பார்க்கலாம்.

*நான் அப்படியே உறைந்து போய் நின்று விட்டேன்.* சொத்தையும் விட்டு கொடுத்து விட தயார்; ஆனால் மனிதனால் தற்பெருமையை(புகழை), விட்டு கொடுக்க முடியவில்லை. இதுதான் உண்மை.

# *பக்தி என்னும் பயிர் செழித்து வளர போட வேண்டிய வேலி*

**-நல்ல ஹரி**

ஒருவருக்கு, சுத்தமான ஸாத்வீகமான ஹரிபக்தி சித்திப்பதே துர்லபம். அதைவிட துர்லபம், அதை காப்பாற்றி கொள்வது. அத்தகைய பக்தி என்ற பயிர் செழித்து வளர வேண்டுமானால், முதலாவதாக, ஒருவர் தன்னை பற்றி ஆத்மஸ்துதி செய்து கொள்ளல் கூடாது. ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹனுமான் அரிய பெரிய செயல்களை செய்தும் கூட, தன்னை ஒரு இடத்திலும் புகழ்ந்து கொள்ளவில்லை.

கிஷ்கிந்தாவிற்குள் பிரவேசிக்கும் ராம, லக்ஷ்மணர்களை பார்த்து, சுக்ரீவன், வாலியின் ஆட்களோ என்று பயந்து சந்தேகப்பட்டு பயப்படும்பொழுது, ஹனுமார்தான் முதலில், ராம, லக்ஷ்மணர்களை தரிசனம் செய்து விசாரித்து, சுக்ரீவனுடன் அக்னி சாட்சியாக நட்பு செய்து வைக்கின்றார். அநாயசமாக கடலை தாண்டி சீதையை பார்த்தார். அப்படி தாண்டும்பொழுது ஏற்பட்ட இடர்களை சமாளித்தார்.

சீதையும் அனுமனை, ராவணனோ அல்லது வேறு யாராவது அசுரனோ என்று சந்தேகப்படும்பொழுது, சமயோசிதமாக ராம கதையை கூறி சீதையிடம் ராமரின் மோதிரத்தை தருகின்றார். சீதை தந்த சூடாமணியையும் பெற்றுக்கொண்டு, ராவணன் சபையிலும் போய் சமாதானம் பேசுகின்றார். மீண்டும் வந்து, ராமரிடம் சூடாமணியை தந்து நடந்த விவரங்களையெல்லாம் தெரிவிக்கின்றார். ராம, லக்ஷ்மணர்களை தோளில் சுமந்து, கடற்கரையை அடைகின்றார். விபீஷணனை ராமருடன் சேர்த்து வைக்கின்றார். சேதுபாலம் கட்டி அக்கரையை அடைகின்றனர். போரில் ராமர், லக்ஷ்மணர் மற்றும் எல்லா வானர படைகளும் தன் நினைவற்று கிடக்கின்றனர். அப்பொழுது ஜாம்பவான் சொல்படி சஞ்சீவி பர்வதம் கொண்டு வந்தால்தான், ராமர், லக்ஷ்மணர் உள்பட அனைவரும் உயிர் பிழைக்கக்கூடிய ஒரு நிலை.

அப்பொழுது நாமாக இருந்தால், என்ன நினைப்போம்? "ராமர் தெய்வம்; நம்மை காப்பாற்றுவார் என்று நினைத்து

வந்தோம். கடைசியில் இவரையே நாம் காப்பாற்ற வேண்டியுள்ளது. நாம் சஞ்சீவி பர்வதத்தை கொண்டு வந்தால்தான், ராமரே எழுந்து வருவார். இவர் என்ன தெய்வம்?" என்று நினைக்க தோன்றலாம்.

ஆனால், அந்த நிலையில் ஹனுமார் என்ன செய்கின்றார்? ராமரை பார்த்து, "எடுத்த மனுஷ்ய அவதாரத்திற்கு ஏற்றாற் போல் நடிக்க வேண்டும் என்பதற்காக, நீர் போடும் நாடகம் இது. இந்த சஞ்சீவி பர்வதமும், உம்முடைய கிருபை இருந்தால் மட்டுமே என் கண்களுக்கு புலப்படும்; அப்பொழுதுதான் என்னால் எடுத்து வர முடியும்" என்று படுத்திருக்கக்கூடிய ராமர் சரணத்தில் ஒட்டியுள்ள மணலை எடுத்து, தனது சிரசில் போட்டுக் கொண்டு கிளம்புகின்றார். சஞ்சீவி பர்வதமும் கொண்டு வரப்பட்டு, போர் தொடங்குகின்றது. அக்னி பிரவேசம் செய்ய காத்திருக்கும் பரதனை, ராமர் வந்து விட்டார் என்ற செய்தியை சொல்லி தடுக்கின்றார்.

ஸ்ரீராமர் ஹனுமாரை பார்த்து, "நீ எவ்வளவு பெரிய காரியத்தை சாதித்துள்ளாய்" என்று கொண்டாடும்பொழுது, ஹனுமார் சொன்ன பதில் என்ன? "பிரபோ! நான் ஏதோ பெரியதாக சாதித்து விட்டதாக, தாங்கள் கூறுகின்றீர்கள். நான் எதையும் சாதித்து விட்டதாக நான் நினைக்கவில்லை. இந்த கூட்டத்தில் உள்ள ஒரு சாதாரண குரங்கை பார்த்து, தேவரீர் அனுக்ரஹம் செய்து சங்கல்பம் செய்திருந்தீர்களானால் கூட, அந்த குரங்கே செய்திருக்கும். ஒருவர் ஒன்றை சாதிப்பதற்கு, தேவரீருடைய அருளும் சங்கல்பமும்தான் காரணம்" என்று சொன்னார்.

இப்படி ஹனுமாரை போல், ஆத்மஸ்துதியே இல்லாமல் இருந்தால்தான், பக்தி பயிர் வளரும்.

*அதிசயங்களும் அற்புதங்களும் ஆன்மீகத்தின் இறுதி நிலை இல்லை. அமைதியும் ஆனந்தமுமே ஆன்மீகத்தின் இறுதி நிலை.*

*- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜீ*

# ஸ்ரீராம 'நாம' வைத்யம்

கங்கைக் கரையை ஒட்டிய பூடாபூர் என்றொரு க்ராமத்தில், சிவகுமார் உபாத்யாயி எனும் பண்டிதர் வாழ்ந்து வந்தார். நன்றாக ஆரோக்யத்துடன் இருந்த அவருக்கு, திடீரென ஒரு வியாதி வந்தது. பழங்கால சிகிச்சையை ஒட்டி, வைத்யம் செய்தனர். பத்தியமும் வெகுவாக பரிந்துரைத்தனர். பத்யத்துடன் மருந்தை உட்கொண்டால், கைமேல் பலன் கிடைக்கும்; வியாதி விலகும் என்பது உண்மைதான். ஆனால், சிவகுமாருக்கு அளித்த சிகிச்சையினால் ஒன்றும் ஆரோக்யம் ஏற்படாமல், வியாதி முற்றிக்கொண்டே இருந்தது. சிகிச்சை பலன் அளிக்காது என்று ஏறத்தாழ முடிவுக்கு வந்த சமயம்.

அவருடன் அவரது வயதான தாய் மட்டுமே இருந்தாள். வேறு உறவு ஏதும் இல்லை. தன் மகனுக்கு வைத்யம் செய்வதற்காக, தனது ஆஸ்தி எல்லாவற்றையும் விற்று, காசிக்கு கூட்டி வந்தாள் அந்த தாய். ஆங்கில வைத்யம் செய்தாள் அந்த பாசமுள்ள அன்னை. சில மாதங்கள் ஆங்கில வைத்யம் முறைப்படி எடுத்துக்கொண்ட பின்னும் கூட, ஒரு முன்னேற்றமும் தென்படவில்லை. அந்த அன்னை நம்பிக்கை இழந்து, பரம சோக உருவாக மாறி போனாள். எப்பொழுதும் அழுது கொண்டே இருந்தாள். பெற்ற மகன் படுத்த படுக்கையாய் இருப்பதை, எந்த தாயால் சகிக்க முடியும்?

காசியில் இவர்களின் பக்கத்து வீட்டில், விஸ்வநாதன் என்பவர் தினமும் ராமாயண பாராயணம் செய்து வந்தார். அவருக்கு இளகிய நல்ல குணமும், பரோபகார சிந்தனையும் இருந்தது. ஒருநாள் சிவகுமாரின் தாய், விஸ்வநாதனிடம் ஏதோ சொல்ல அவர் வீட்டுக்கு வந்தாள்; நடுவழியிலே, உடல் அசதியினாலோ ஏதோ தடுக்கியதாலோ தடுமாறி விழுந்தாள். எதற்கோ வெளியே வந்த விஸ்வநாதன், அந்த அன்னையை சாலையில் இருந்து எழுப்பி உட்கார வைத்து சிரமப்பரிகாரம் செய்வித்தார். அந்த அன்னை அந்நிலையில், "எத்தனையோ வைத்யம் செய்தும், என் மகன் பிழைப்பதாக தெரியவில்லை. மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர். இனி என்னால் எனக்கோ மற்றவருக்கோ என்ன பயன்? அவன் மரிப்பதை பார்க்க

என்னால் இயலாது. அதனால் அதற்கு முன், நானே கங்கையில் விழுந்து உயிரை விட்டு விடுகிறேன். உன்னை பார்க்கத்தான் வந்தேன். நீ நல்லவன். என் மகனுக்கு வேண்டிய உதவிகளை செய்து, நீ என் மகனின் ஈமச்சடங்குகளையும் செய்து விடு. அவனுக்கு பார்த்த வைத்யத்திற்கு போக என்னிடம் இருக்கும் கொஞ்சம் பணம், இதுதான்; பெற்றுக் கொள்" என்றவாறு, வாய் நடுங்க பேசிவிட்டு எழுந்துபோக முயன்றாள். விஸ்வநாதன் உடனே கனிவான குரலில், **"அன்னையே! ஏன் பயப்படுகிறீர்கள். ஈசன் பரம வைத்யன். மருத்துவர் வியாதியைத்தான் போக்குவார்; ஈஸ்வரன் உயிரையும் தர வல்லவன்; அவனை நம்புங்கள்; அவனை ப்ரார்த்தியுங்கள்" என்றார்.** மேலும், "பயத்தை உதறுங்கள். உங்களுக்கு அது அனாவசியம். வைத்யவைத்யனான கடவுளை நம்புங்கள். அந்த வைத்யன் வ்யாதியையும் போக்குவான். உயிரையும் காப்பான். அவனுடைய சக்தி எல்லையற்றது. அவனை நம்பி ப்ரார்த்தனை செய்யுங்கள்" என்று சொன்னார்.

பிறகு, சிவகுமார் வீட்டுக்கு சென்று, அங்கு எலும்பும் தோலுமாய் இருக்கும் சிவகுமாரைப் பார்த்தார். சிவகுமாருக்கு வெறும் நினைவு மட்டும்தான் இருந்தது. விஸ்வநாதன் சிவகுமார் அருகே அமர்ந்து, அவர் காதில் உரக்கமாக, **"உங்கள் பயத்தை உதறுங்கள். நாளை முதல் தினமும் முடிந்தவரை ராமஜெயம் என்று எழுதி வாருங்கள். முடிந்தவரை எழுதினால் போதும்"** என்றார். அவ்வப்போது, ஓய்வு எடுத்துக் கொண்டு எழுதுங்கள் என்றார்.

"அப்படி செய்தால், உங்கள் வியாதி படிப்படியாக பறந்து விடும். எழுதும்போது, மனம் செய்கையில் அதிகமாக ஈடுபடும். மனமும் செய்கையும் ஒருமைப்படும்போது, நமக்கு பெருத்த நன்மை கிடைக்கும். உற்சாகத்துடன் தளராமல், நம்பிக்கையுடன் எழுதுங்கள். தெய்வம் உதவும்" என்று நம்பிக்கை பொங்க சொன்னார். படுக்கையில் இருந்த சிவகுமார், தனக்கு அந்நிலையில் யாராலும், எந்தவித நன்மையும் செய்ய முடியாது என புரிந்து கொண்டார். அதனால், பகவானை அதிகம் நம்ப ஆரம்பித்தார். முதல் நாள், கையை தூக்கவே முடியவில்லை; எனினும், சிரமப்பட்டு சில ராமஜெயம் எழுதினார். இவ்விதம் சில நாட்கள் சென்றன.

சிலநாள் கழித்து, சிவகுமாரை பார்க்க விஸ்வநாதன்

வந்தார். சிவகுமார், மலர்ந்த முகத்துடன் விஸ்வநாதனை பார்த்து சிரித்தார். அதில் வியாதியின் தீவிரம் குறைந்திருப்பது தெரிந்தது.

விஸ்வநாதன், "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். சிவகுமார், "முதல் நாள் என்னால் எழுதவே முடியவில்லை. இருந்தாலும், பிடிவாதமாக கொஞ்சம் ராமஜெயம் எழுதினேன். படிப்படியாக உயர்த்தி கொண்டேன். விட்டு விட்டு எழுதினேன். இப்பொழுது ஐந்நூறு கூட எழுத முடிகிறது" என்றார். அவர் சொன்ன பதிலில் இருந்து, அவருக்கு அது பிடித்து உள்ளது என்பது விஸ்வநாதனுக்கு புரிந்தது. விஸ்வநாதன் சற்று நேரம் பேசிவிட்டு வீட்டிற்கு திரும்பினார். போகப்போக இந்த 'ராமஜெயம் தவம்' ஆனது பெரிதாகி, வேலை செய்ய ஆரம்பித்தது. மனதில் பூரிப்பும் நம்பிக்கையும் வந்தது. உடலும் தேறி ஆரோக்யம் கண்டது. கொஞ்ச காலத்தில் பூரண குணம் பெற்று, தன் க்ராமம் சென்றார். அவர் அன்னையும் பரமனை பக்தியுடன், ஆராதித்து வர, இரு வருடங்களில் சிவகுமார் முன்பை விடவும், அதிக பலம் பெற்றவராக ஆனார். இது ஓர் உண்மை சம்பவம்.

இக்கலியுகத்தில் மனிதர்கள் வேண்டிய நன்மைகளை பெற, பகவந்நாமாவைத் தவிர வேறு கதியில்லை. இந்திரியங்களை அடக்கி, மனதை ஒருமைப்படுத்தி ஜபிப்பது மிகவும் கஷ்டமான கார்யம். அதனாலேயே காஞ்சி மஹாஸ்வாமிகள் லிகித ஜபம் செய்ய சொல்லி வந்திருக்கிறார்கள். எழுதும் காலத்தில், கண் எழுத்தை பார்க்க, கை எழுத, வாய் சொல்ல, மனம் தியானிக்கிறது. இப்படி, இந்திரியங்களை மனதுடன் ஒருமைப்படுத்த ராமஜெயம் எழுதுவதைப் போல், மிகச் சுலபமான சாதனம் என்ன இருக்கிறது? பல்வித துன்பங்களால் துன்புறும் மனிதர் பரம சுகம் பெற, ராம நாமத்தை தவிர, ஒருமைப்பட்ட மனதுடன் ஜபிப்பதற்கு சிறந்த வழி வேறு ஒன்றுமில்லை.

அந்த **ராம நாமாவை** எழுதி வந்து, அதனால் ஒருமுகப்பட்ட மனதுடன் ஜபித்து, விரைவில் எல்லாவித நலன்களையும் ஒருவரால் பெற முடியும்.

## *கனடா மற்றும் அமெரிக்க சத்சங்கங்கள்*

(விர்ஜினியாவில் நாமத்வார் திறப்பு)

சத்குருநாதர், மாதுரி ஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் அளவற்ற கருணையால் அமெரிக்காவின் Virginia மாகாண தலைநகர் Richmondல் VIRGINIA NAMADWAAR ஸ்ரீமதி/ஸ்ரீலலிதா ராமன் குடும்பத்தினரின் இல்லத்தில் தரை தளத்தில் துவங்கப் பெற்றது. தொடர்ந்து 5ம் வருடமாக VA GOD சத்சங்கத்தினரால் மதுர உத்சவம், ராம லீலா மேளாவும் நடைபெற்றது. குருநாதரின் பூரண அருளாசியுடன் சத்சங்கங்களுக்காக அமெரிக்கா, கனடா வந்துள்ள பூர்ணிமாஜி எல்லா நிகழ்ச்சிகளையும் முன்னின்று நடத்தினார். அமெரிக்காவில் Houston, Texas நகரத்தை அடுத்ததாக நிறுவப்பட்டுள்ள இப்பிரார்த்தனை மையம் அயல்நாடுகளில் அமையும் 5வது நாமத்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

மே 26 முதல் மே 30 வரை நடைபெற்ற சத்சங்கங்களில் பூர்ணிமாஜி கலந்து கொண்டு அழகாக ராமாயண உபன்யாசம் செய்தார்கள். மே 27 வெள்ளி அன்று சுந்தரகாண்ட பாராயணம் நடைபெற்றது. மாலை யானை வாகனத்தில் சத்குருநாதர் திருவுருவ படத்துடனும், பல்லக்கில் மாதுரி ஸகி ஸமேத ப்ரேமிகவரத டாகுர்ஜியும் பவனி வந்தனர். ‘ஹரே ராம’ நாம கீர்த்தனமும் மங்கள வாத்யமும் முழங்க, சத்குருநாதரின் பிரசாதங்களுடன் பூர்ணிமாஜி VIRGINIA NAMADWAARஇல் ஸ்ரீப்ரேமிக வரதனின் நாம ஸாம்ராஜ்யத்தை துவக்கி வைத்தார். பின் ஸ்ரீகிருஷ்ண ஜனனம் பாராயணமும் திருவாராதன சேவையும் நடைபெற்றது. Richmond சத்சங்க குழந்தைகள் கோஷ்டியாக Mahamantra Instrumental Medley இசையை அர்ப்பணித்தனர். பின், வண்ண மலர்களாலான நிகுஞ்சத்தில் திவ்ய தம்பதிகள் இருக்க, இரவு ஜானவாசம், ரகுவீர கத்யம், மதுரகீதம், ராமதாசர் கீர்த்தனங்கள், வாண வேடிக்கையுடன் அமோகமாய் நடைபெற்றது. மே29 அன்று பாகவத சம்பிரதாயப்படி அஷ்டபதி, திவ்யநாமத்துடன் ஸ்ரீசீதா கல்யாண மஹோத்சவம் விமர்சையாக கொண்டாடப் பெற்றது. மாலை குழந்தைகளுக்கான ராமாயண quizஉம் மஹிமா மற்றும் மானசா ரவியால் நடத்தப்பட்டது.

**மே 30** அன்று நருத்யோபசாரம், போக் சேவைக்கு பின், அனுமத் உத்சவமுடன் மதுர உத்சவம் பூர்த்தியாயிற்று.

எல்லா நாட்களும், அன்னதானம் செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு, அமெரிக்க, கனடா அன்பர்கள் சுமார் **250**பேர் வந்து கலந்து கொண்டு, பகவத் கைங்கர்யத்திற்கும் குருக்ருபைக்கும் பாத்திரமாயினர். ஏற்பாடுகள் அனைத்தையும் VA-GOD சத்சங்கத்தினர் நேர்த்தியாக செய்திருந்தனர். பகவானின் பிரசன்ன ஹ்ருதயத்தை உணர்த்தும் வகையில், பூர்த்தி நாளன்று மழை பொழிந்தது. கலந்துகொண்ட ஒவ்வொரு அன்பரும், சத்குருநாதரின் அருளை, நன்றாக உணரும் பாக்யம் பெற்றனர் என்றால் அது மிகையல்ல. நம்பி அவன் சரணத்தை நாமம் சொல்லி வாழ்ந்திடுவோம்! Virginia Namadwaarல் ப்ரதிதினம் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வருகிறது.

ஜூன்**2**லிருந்து **5**ஆம் தேதி வரை போஸ்டனில் தினம் ஒரு பக்த சரித்திரமாக, ஹரி கதா சைலியில், பூர்ணிமாஜி கான்கார்டில் உபன்யாசம் செய்தார். பூர்த்தி நாளன்று ஷீரடி பெல்லரிக்காவிலுள்ள சாயிபாபா கோவிலில் ராதா கல்யாணமும் இடம்பெற்றிருந்தது. முன்னதாக போஸ்டன் காண்டனில் நடைபெற்ற கோபகுடீரம் மற்றும் மதுரகீதம் பாட்டு போட்டி நிகழ்ச்சிகளில், பூர்ணிமாஜி கலந்து கொண்டிருந்தார். க்வின்சி விஷ்ணு சஹஸ்ரநாம மண்டலியினரின் நிகழ்ச்சிகளிலும், அவர் பங்கு கொண்டிருந்தார். மேலும் அவர், ஜூன் **9** முதல் **12** வரை ஆதிசங்கரர் பாஷ்யத்தை ஒட்டி ஹூஸ்டன் நாமத்வாரில் பகவத் கீதா உபன்யாசம் செய்தார். இந்நிகழ்ச்சிகளில் எல்லாம், நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, மிகுந்த பயனுற்று மகிழ்ச்சியுடன் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மே **13 - 17** - சிறுவர், சிறுமிகள் பங்கேற்க பாரதத்தின் பாரம்பரிய பொக்கிஷங்களை மையமாக வைத்து, காஸ்மிக் கனெக்ஷன்ஸ் எனும் அருமையான நிகழ்ச்சி ஒன்றில் பூர்ணிமாஜி பங்கேற்றார். இதில் பல சிறார் கவிநயத்துடன் எழுதுதல், ஆயுர்வேத சமையல், சங்கீதம், மனவளம், ஓவியம், சில்பம், பொது இடங்களில் பேசுவது, புகைப்படக்கலை ஆகிய போட்டிகளில் பங்கேற்றனர். இதன் ஒரு அங்கமாக, பிற மத வழிபாடு முறைகளையும் தெரிந்து கொண்டனர்.

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

ப்ரபு ரூபருக்கு வைராக்யத்தை உபதேசிக்கும் பொருட்டு கூறலானார், ‘ரூப்! காமினி, காஞ்சனம், கீர்த்தி என்ற இம்மூன்றும் இருக்கும் இடத்தின் எதிர் திசையில் இருக்கிறது பகவானை அடையும் வழி. ஒருவன் இம்மூன்றையும் மனதால் துறந்தால் தான், அவன் இந்த பகவத் வழியில் செல்வதற்கான அதிகாரத்தை பெறுகிறான். இம்மூன்றிலும் மனது ஆனந்தம் கொள்ளுமானால், அவனுக்கு பகவான், ப்ரேமை என்பதெல்லாம் எங்கே?

ரூப்! உண்மையில் இந்த காமினி, காஞ்சனம், கீர்த்தி இவற்றின் ஸ்வரூபத்தை யோசித்து பார்! காமினி ஸ்த்ரீயின் பின்னால் இந்த உலகமே பித்து பிடித்தாற்போல் தெரிகிறது. ஆனால் உண்மையில் அந்த ஸ்த்ரீ சரீரத்தில் என்ன இருக்கிறது? வெறும் அஸ்தி, மாம்ஸம், மலம், மூத்திரம் போன்று அருவருக்கத்தக்க விஷயங்களையே அது உடையது. மிகவும் அழகான ஒரு ஸ்த்ரீ கூட ரோக வசப்பட்டால், அவள் உடம்பிலிருந்து வரும் துர்நாற்றமும், அவளது அருவருக்கத்தக்க தோற்றத்தையும் கண்டு, இது நாள் வரை அந்த சரீரத்தை கண்டு மோகமடைந்த அவளது கணவன் கூட தூரம் சென்று விடுகிறான். பஞ்ச பூதங்களாலான இந்த ஒன்பது ஓட்டை உடைய சரீரத்தில் சுகம், சாந்தி, இன்பம் எல்லாம் எங்கேயுள்ளது? அதில் ஏதோ ஆனந்தம் இருப்பது போல் தோன்றுவதும், அந்த ப்ரம்மத்தின் நிழல் மாத்திரமே. ஆதலால், நிழலை விடுத்து நிஜத்தைப் பற்றினால்தான் சாந்தி கிட்டும்.

ரூப்! செல்வமும் இது போலவே தான். எத்தனை செல்வத்தை அடைந்தாலும், ஒருவருக்கும் போதும் என்ற எண்ணமே வருவதில்லை. ஒருவன் ஏழு த்வீபங்களுக்கு அதிபதியாகிவிட்டாலும் கூட, அவனுக்கு மூவுலகங்களையும் ஆள வேண்டும் என்ற ஆசை எழும். ஸம்பூர்ண ப்ரம்மாண்டத்தின் ஸ்வாமித்வம் ஒருவனுக்கு கிட்டினால் கூட அவனுக்கு சாந்தி ஏற்படுவதில்லை எனும் போது, இருபது முப்பது க்ராமங்களுக்கோ அல்லது ஆயிரம் க்ராமங்களுக்கோ

ஸ்வாமியாக இருந்து ஒருவன் தன்னை ஆனந்தப்படுத்திக் கொள்ள எண்ணுவது எத்தனை மூடத்தனம்? நீ ஒன்றை ஆழ்ந்து யோசிக்க வேண்டும். பொன்னுக்கும் மண்ணிற்கும் என்ன வித்யாசம்? பூமியிலிருந்து எவ்வாறு வெள்ளை மண், மஞ்சள் மண், கருப்பு மண் என்று ஸ்தான பேதத்தால் வெளி வருகின்றனவோ, அதேபோல் தங்கமும் வெள்ளியும் மஞ்சள்-வெள்ளை மண்ணேயாகும். அதில் உயர்ந்தது என்ற எண்ணம் உன்னால் கற்பனை செய்யப்பட்டதே ஆகும். நீயே அதை உயர்வாக எண்ணி, பின் அதை அடைவதற்கு பைத்தியம் போல் பாடுபடுகின்றாய். உனது உடலைக் காட்டிலும், அதன் நிழலுக்கு தனி இருப்பு என்பதே கிடையாது. நிழல் உனது உடலினுடையது தான். இப்பொழுது ப்ரேமையின் காரணமாக நீ நிழலைப் பிடிக்க ஓடுவாயானால், அது ஒரு நாளும் உன் கையில் சிக்காது. பின்னாடி ஓடுவதால், ஒருவனால் நிழலை பிடித்துவிட முடியுமா என்ன? உன்னைக் காட்டிலும், வேறு என்று எண்ணி, நிழலை தொடரும் நீ, அது நீயேதான் என்ற எண்ணம் கொண்டு, அதை விட்டுவிட்டு ஓடுவாயானால், அது உன்னை பின் தொடர்வதை கவனிக்கலாம். உன்னை விட்டு, அதனால் எங்கு சென்றுவிட முடியும்? நான் சொல்வது புரிகிறதா?

ரூபர் மெதுவாக கூறினார், ‘ஆம் ப்ரபோ! கொஞ்சம் புரிந்தது.. வாஸ்தவத்தில் தங்கத்தில் ஸ்ரேஷ்டத்வமும், மண்ணில் தாழ்மை புத்தியும் மனதினால் கல்பிக்கப்பட்டதே அன்றி, உண்மையானதல்ல’.

ப்ரபு - ஆம்! அதுவே சரி! இதுநாள் வரை நீ, பணத்தையே சிறந்தது என்று எண்ணினாய். அதையடையவே நீ ஹுசைன் ஷாஹின் தர்பாரில் இருந்தாய். நீ உயர் குலத்தில் பிறந்த போதிலும் அவனிடம் வேலை பார்த்தாய். அவனோ தனது ஸ்வாமிக்கே த்ரோகம் செய்யும் நன்றியற்றவன்; நீயோ தர்மத்திற்கு கட்டுப்பட்டு, நிர்வாகம் செய்பவன். அவனோ ஒரு மூடன், நீயோ மஹா பண்டிதன். அவன் பொறுப்பற்றவனாக இருந்தான், நீயோ எப்பொழுதும் விழிப்புடன் இருந்தாய். அவன் அதர்மியாக இருந்தான், நீயோ தர்மாத்மாவாக இருந்தாய்.

(தொடரும்)

# வீடு தேடி வருவான் விட்டலன் -29

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

**ஸ்ரீஞானேஸ்வரர்-18 ஞானேஸ்வரீ**

கோயிலில் இப்பொழுது ஞானேஸ்வரர் சாய்ந்து நின்று கொண்டிருந்த தூணை, ஸ்வாமியாக வணங்கி வருகிறார்கள். கல்லேஸ்வரரை விட இந்த தூணிற்குத்தான் அதிக அளவில் பூஜை எல்லாம் நடக்கும். வஸ்திரம் சாற்றி, மாலை இட்டு, புஷ்பங்கள் சமர்ப்பித்து, பூஜை செய்து, ஆரத்தி காட்டி வணங்குவர். இந்த தூணின் மேல் ஞானேஸ்வரர் எழுதிய அந்த பகவத் கீதையின் பாஷ்யமான 'பாவார்த்த தீபிகை' வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த தூணின் மேல் சந்திரன், சூரியன் பொறிக்கப்பட்டு இருப்பதை இன்றும் காணலாம். உலகில் சந்திரன், சூரியன் இருக்குமளவு இந்த ஞானேஸ்வரர் எழுதிய ஞானேஸ்வரீ எனப்படும் 'பாவார்த்த தீபிகை' இருக்கும். அதைத்தான் தூணில் பொறிக்கப்பட்ட அந்த சந்திர, சூரியர்கள் தெரிவிக்கின்றன.

ஞானேஸ்வரருக்கு குரு அவரது அண்ணாவான நிவ்ருத்தி நாதர்தான். தனது குருவான நிவ்ருத்தி நாதருக்கும், மஹா கணபதிக்கும் வந்தனங்கள் தெரிவித்து விட்டு, ஞானேஸ்வரியை துவங்கி இருக்கிறார் ஞானேஸ்வர். இது உலகில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது. மிகவும் அழகாக பக்தியும், ஞானமும் ததும்பி இருக்கும். ஞானேஸ்வரர் வரலாற்றில் மற்றுமொரு அதிசய சம்பவம் உண்டு. அவரை ஒருவன் வந்து நமஸ்கரித்து, ஸ்வாமி! இன்று எங்கள் வீட்டில் சிராத்தம். பித்ருக்களை வணங்கி, பிராமணர்களை உபசரிக்க வேண்டும். எனக்கு அதற்கு வசதி இல்லை என்று சொல்லி கண் கலங்கினான். ஞானேஸ்வரர் அவனைப் பார்த்து மனமிரங்கினார். அவனைப் பார்த்து ஒரு கடாக்ஷம் செய்தார். அன்று அவனது பித்ருக்களே நேரில் வந்து அவன் வீட்டில் உணவு எடுத்துக் கொண்டு சென்றனர்.

எருமை மாட்டை வேதம் சொல்ல வைத்தார். இறந்தவனை பிழைக்க வைத்தார். பித்ருக்களையே நேரில்

வரவழைத்தார் என்று பல அதிசயங்கள் அடங்கிய ஞானேஸ்வரர் சரித்திரத்தில் சார்ங்க தேவர் என்பவருக்கு முக்கிய இடம் உண்டு.

## சார்ங்க தேவர்

பூனாவிலிருந்து **25** கி.மீ. தொலைவில் ஆலந்தி இருக்கிறது. இங்கு தான் ஞானேஸ்வரரின் சமாதி இருக்கிறது. இந்த ஊரில் ஒரு சிறிய களிமண் சுவர் வீட்டில்தான் ஞானேஸ்வரர் வாழ்ந்து வந்தார். ஞானேஸ்வரர் சிறிய வயதானவராக இருந்தாலும் பிரதிஷ்டானபுரத்திலும், மேவாஸாவிலும் அவர் செய்த மஹிமைகள் எங்கும் பரவி அவரை மிகவும் பிரசித்தியாக்கி விட்டிருந்தன.

எருமை மாட்டையே வேதம் சொல்ல வைத்திருக்கிறார். செத்தவனையே பிழைக்க வைத்திருக்கிறார். கீதைக்கு பாஷ்யம் எழுதியவர்; அண்ணா சதாசிவரின் அம்சம்; இவரோ சாக்ஷாத் ஹரியின் அவதாரம்; ஒரு தம்பி ப்ரும்மதேவரின் அம்சம்; தங்கையோ துர்க்கையின் அம்சம்; பண்டிதர்களே சுத்த ஞானிகள் என்று எழுதிக் கொடுத்தவர்கள் என்று ஊர் முழுக்க எப்பொழுது பார்த்தாலும் ஞானேஸ்வரரையும் அவரது சகோதர, சகோதரியையும் பற்றியுமே பேச்சு.

பொறாமை என்பது மனிதனின் இயல்பு. இது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். சாக்ஷாத் ராமபிரானின் வசனம்தான் இதற்கு பிரமாணம். ராமன் காட்டுக்கு போக முடிவு செய்த பின், முதலில் சீதையை கூட்டிப் போவதாக முடிவு செய்யவில்லை. அப்பொழுது அவர் சீதைக்கு பலவிதமான உபதேசங்களை செய்கிறார். அதில் ஒன்றில், "சீதே! பரதன் உன்னிடம் வந்து, குளம், பாலம் கட்டி உள்ளேன்; வந்து பாருங்கள் என்று சொன்னால், 'என் ராமராக இருந்தால் இன்னும் அருமையாக செய்திருப்பார்' என்று சொல்லி விடாதே. ஏனெனில் சொந்த அண்ணாவின் புகழை கூட தம்பியால் கேட்க முடியாது" என்கிறார் ராமர். சாக்ஷாத் ராமரே சீதையிடம், தமது அருமை தம்பி பரதனைப் பற்றி சொல்வது போல் நமக்கு ஒரு உபதேசம் செய்கிறார். பரதனுக்கே இந்த நிலைமை என்றால் சாமான்யர்களைப்பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. (தொடரும்)

## சனாதனப்புதிர் பகுதி 87 -- விடைகள் -ஆத்ரேயன்

1. 120 வருடங்கள்.
2. ஏகாதசி தினத்தன்று சாப்பிடக்கூடாது.
3. பெரியவாச்சான்பிள்ளையை.
4. பசுக்கள் கட்டப்பட்டிருக்கும் இடத்தை; புண்யாஹவசனம் செய்யாமல் எந்த விதமான நல்ல காரியங்களையும் அங்கு செய்யலாம்.
5. விஷ்ணுனா வித்ருதே பூமி: - விஷ்ணுவினால் - பதில் சொன்னவர் - ஸ்ரீவத்ஸ மஹரிஷி.
6. பசி - முதல் விரோதி.
7. இவர் வாமனாவதாரம், ராமாவதாரம், கிருஷ்ணாவதார காலங்களில் இருந்தவர்; பரம பக்தர்.
8. சுக்ராச்சாரியார்.
9. புஷ்ய நக்ஷத்திரத்தில் மீன லக்னத்தில் பிறந்த பரதனை.
10. தசாஸ்வமேதி புனரேதி ஜன்மா
    க்ருஷ்ண ப்ரணாமி ந புனர்பவாய

பத்து அஸ்வமேத யாகங்கள் செய்தவர் மறுபிறவி அடையலாம். ஆனால் க்ருஷ்ணனை ஆச்ரயித்தவர்களுக்கு மறுபிறவி இல்லை.

## சனாதனப்புதிர் பகுதி 87 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. பாஷ்யகாரர் ராமானுஜர் எத்தனை வருடங்கள் ஜீவித்து இருந்தார்?
2. எந்த தினத்தன்று துளசியை சாப்பிடக்கூடாது?
3. வியாக்யான சக்கரவர்த்தி என்று யாரை கூறுகிறார்கள்?
4. கோஷ்டம் என்று எதை சொல்கிறார்கள்? அதன் விசேஷம் என்ன?
5. உலகம் யாரால் தாங்கப்படுகிறது என்ற வசிஷ்டரின் கேள்விக்கு என்ன பதில்?
6. மனிதனுக்கு பரம விரோதி யார்?
7. ஜாம்பவானின் விசேஷம் என்ன?
8. ம்ருத சஞ்சீவனி மந்திரம் தெரிந்த ஒரே ஒருவர் யார்?
9. பிறக்கும்போதே விவேகமுடையவனாக பிறந்தான் என்று வால்மீகி யாரை குறிப்பிடுகிறார்?
10. ஸ்ரீகிருஷ்ணனை வணங்கியவர்களுக்கு மறு பிறவி இல்லை; இதை வடமொழியில் எப்படி சொல்வார்கள்?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கண்ணன் சொல்லி கொடுத்தது!

மாதவன் நன்கு படிக்க கூடிய நல்ல பையன். அவன் பதினொன்றாம் வகுப்பு படித்து கொண்டிருந்தான். நல்ல கலகலப்பான அவன் திடீரென சில காலமாய் பள்ளியில் இருந்து வந்தவுடனேயே, மோவாய்க்கட்டையில் கை வைத்து கொண்டு உற்சாகமின்றி ஏதோ சிந்தனையில் உட்கார்ந்திருப்பதை அவன் அன்னை காமாக்ஷி பார்த்தாள். மாதவனுக்கு உணவு பரிமாறுகையில் மெதுவாக அவன் அன்னை, "என்னப்பா மாதவா! ஏன் ஒருமாதிரி உற்சாகமில்லாமல் காணப்படுகிறாய்? என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

அப்பொழுது அருகிலிருந்த மாதவனின் தந்தை நடேசன் இடைமறித்து, "எல்லாம் எனக்கு தெரியும். நானும் ஏன் என்று கேட்டேன். அடுத்த முப்பது நாட்களுக்குள் பதினைந்து பாடங்களை படிக்க வேண்டுமாம். மேலும் வரும் வருடம் பனிரெண்டாம் வகுப்பு. அதை மிகவும் நன்றாக படிக்க வேண்டுமே? என அவன் யோசித்து கொண்டிருக்கிறான். அவன் யோசித்து செயல்படுவது எனக்கு பெருமையாக இருக்கிறது" என்றார். மேலும் அவர் மாதவனை பார்த்து, "யோசித்து நல்ல முடிவெடுத்து சரியானபடி செய். கவனமாக நன்றாக படிக்க வேண்டும்" என்றார். 'சரி' என்று தலை ஆட்டினான் மாதவன். தந்தை வேகமாக சாப்பிட்டு விட்டு, 'எனக்கு ஒரு அவசர வேலை இருக்கிறது; இதோ வந்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டு கிளம்பி சென்றார்.

ஆனால், இதை பார்த்து கொண்டிருந்த அன்னை காமாக்ஷிக்கோ, ஏற்கனவே நன்றாக படித்து கொண்டிருந்த மாதவனிடம் ஒரு குறையுமில்லை என தோன்றியது.

அன்னை மாதவனிடம், "என்னப்பா உன்னால் ஒருநாளில் எத்தனை பாடம் படிக்க முடியும்?" என்றாள். என்னம்மா, ஒருநாளில் ஒரு பாடம்தான் நன்றாக பதியும்படி படிக்க முடியும் என பதில் சொன்னான் மாதவன்.

உடனே, "சரி இன்னும் இந்த வருட பரீஷைக்கு எத்தனை நாள் இருக்கிறது" என காமாக்ஷி கேட்டாள். மொத்தம் 15 பாடம்; 30நாள்தான் உள்ளது என்றான். உடனே அன்னை, "அப்புறம் ஏன் கவலைப்படுகிறாய். ஒருநாளைக்கு ஒரு பாடம் என்றால், பதினைந்து நாட்களில் எல்லா பாடங்களையும் படித்து விடுவாயே? மேலும் 15நாட்கள் அவகாசம் வேறு உள்ளதே?" என்றாள். மேலும் எதையோ யோசித்து கொண்டு, இந்த பதினைந்து பாடங்களை படிக்க மறந்து விடாதே என்றாள்.

அதை கேட்டவுடன், மாதவன் மன பாரம் குறைந்தாற் போலிருந்தது. "அம்மா! நீ சொல்வது உண்மைதான். இதை படித்து விடுவேன். அடுத்த வருடம் என்ன செய்வது? அது முக்கியமான பரீக்ஷை ஆயிற்றே?" என்றான்.

உடனே அவன் அன்னை காமாக்ஷி சிரித்து கொண்டே, "அதை படிக்க அவகாசம் அடுத்த வருடம்தானே வரும்? இவ்வருடம் படிப்பதை போலவே, அடுத்த வருடமும் நீ படித்து விடுவாய் அல்லவா? இப்படி உட்கார்ந்து கவலைப்படுவதினால், இப்பொழுது படிக்க வேண்டிய பாடங்களை அல்லவா மறந்து விடுகிறாய். நேரம்தானே வீணாகிறது" என்றாள்.

மாதவனுக்கு அன்னை சொல்வது சரியாக பட்டது. "ஆமாம் அம்மா! நீ சொல்வது சரி. நான் ஏன் வீணாக கவலைப்பட வேண்டும்" என்றான். உடனே அவன் முன்போல கலகலப்பாகி விட்டான். அதற்குள் வெளியே சென்றிருந்த அவன் தந்தை நடேசன் திரும்பி வந்திருந்தார். அவருக்கு இப்பொழுது மாதவனை பார்க்க ஆச்சரியமாய் இருந்தது.

'என்ன மாதவா! எப்படி படிப்பது என முடிவு செய்து விட்டாய் போலிருக்கிறது; நல்லது' என்றார். "இல்லை அப்பா! அடுத்த வருடம் படிக்க வேண்டியதை பற்றி இப்பொழுது அதிகம் யோசிப்பதால் பயனில்லை; இப்பொழுது நன்றாக படிப்பது போல், அடுத்த வருடமும் படித்து விடுவேன். நீங்களும் பார்க்கத்தானே போகிறீர்கள்" என்றான்.


அவன் தந்தை நடேசனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. "காமாக்ஷி! எப்படி அழகாக மாதவன் பேசுகிறான் பாரேன்" என்றார். உடனே காமாக்ஷி, "சின்ன வயதிலே என் அன்னை

என்னிடம் எப்பொழுதும் பாரத போரில், கிருஷ்ணன் அர்ஜுனனை உற்சாகப்படுத்தி கொண்டே இருந்தான். அர்ஜுனனால் முடியும் என்று சொல்லி கொண்டே இருந்தான். அதனால் எல்லோரையும் முடிந்தவரை உற்சாகப்படுத்தி அவர்களால் முடியும் என்பதை எடுத்து சொல்ல வேண்டும் என்று எங்களுக்கு சொல்லி கொடுத்தார்கள். அதைத்தான் செய்தேன். அவன் என்ன படிக்கிறான் என்று எனக்கு என்ன தெரியும்" என்றாள்.

ஒருகணம் நடேசன் நிதானமாய் யோசித்தார். பின்னர், "காமாக்ஷி, நீதான் பிள்ளையை சரியாக வளர்க்கிறாய்" என்றார்.

கிருஷ்ண பரமாத்மா சொல்படி கேட்டு நடந்து சென்றால், வெற்றியும் நிச்சயம்தானே! அதனால், நாம் நம்பிக்கையுடன் இருந்து வர பழகுவோம்.


Bhagavatha Dharma - The path for All - A Discourse based on "Kaliyaiyum Bali Kollum" - the famous Mahamanthra Kirtan of Sri Swamiji consisting of 16verses. The discourse in English was given by Dr.Bhagyanathanji in Australia.



**திருச்சி -** மே 26,27 - திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டுள்ள நாமத்வாரின் புதிய வளாகத்திற்கு ஸ்ரீஸ்வாமிஜி விஜயம் செய்து அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். பாகவதோத்தமர்கள் பங்கேற்க மிக சிறப்பாக ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் சீதாகல்யாணமும் நாமத்வாரில் நடைபெற்றது. திரளான அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் ஆசி பெற்றனர். புதிய திருச்சி நாமத்வார் சாஸ்திரி ரோட்டில் (Near Saradambal temple) அமைந்துள்ளது; தொடர்புக்கு 9444460079

**பெங்களூரு -** கர்நாடகா பெங்களூர் ஜெயநகரில் புதிதாக அமைந்துள்ள நாமத்வாருக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மே 29 அன்று விஜயம் செய்தார்கள். சென்ற மாதத்தில் இந்த புதிய நாமத்வார் துவக்கப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். தொடர்புக்கு சேகர் 94495 92956

**சிதம்பரம் -** தில்லைவனம் என சொல்லப்பெறும் சிதம்பர க்ஷேத்திரத்தில், புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள சிதம்பரம் நாமத்வாரை, ஸ்ரீஸ்வாமிஜி ஜூன் 5ஆம் தேதியன்று திறந்து வைத்து அருளினார்கள். இளமையாக்கினார் கோவில் தெருவில் காமாக்ஷி நடேசன் ஹால் கட்டிடத்தில் அமைந்துள்ள இந்நாமத்வார் திறப்பு விழாவிற்கு தீக்ஷிதர்களும் பொதுமக்களும் வந்து கலந்து கொண்டு, புதிய ராதாகிருஷ்ண திவ்ய தம்பதிகளையும் தரிசித்து மகிழ்வுற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அனுக்ரஹ பாஷணம் வழங்கி, துவக்கி வைத்து அருளினார்கள். சிதம்பரம் நாமத்வார் தொடர்புக்கு ஸ்ரீஅருணாசல பாகவதர் - 8130428129

**விருதுநகர் -** விருதுநகர் லக்ஷ்மி மஹாலில், திரளான அன்பர்கள் முன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரை இடம் பெற்றிருந்தது. அனைத்து அன்பர்களும் மஹாமந்திர கீர்த்தனம் செய்து ஆனந்தம் உற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி விருதுநகர் நாமத்வாரில் ஜூன் 6லிருந்து ஜூன் 8தேதி வரையிலும் அன்பர்களுக்கு தரிசனம் தந்தார்கள்.

**தாயில்பட்டி, சிவகாசி -** ஸ்ரீஸ்வாமிஜி ஜூன்7 ஆம் தேதியன்று தாயில்பட்டி சென்றிருந்தார்கள். அன்று மாலை சிவகாசி காரனேஷன் பள்ளியில், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. அன்பர்கள் தங்களது நாம அனுபவங்களை உருக்கமாக பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். கூடி இருந்த 2500க்கும் மேற்பட்டோர் ஒருசேர நாமம் சொன்னது குறிப்பிடத்தக்கது. மறுநாள் 8ஆம் தேதி சிவகாசி நாமத்வாருக்கு விஜயம் செய்து, அன்பர்களுக்கு தரிசனமும் அனுக்ரஹமும் வழங்கினார்கள்.

**தூத்துக்குடி -** ஜூன் 9ஆம் தேதியன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தூத்துக்குடி நாமத்வாருக்கு விஜயம் செய்து, அன்பர்களுக்கு தரிசனமும் ஆசிகளும் வழங்கினார்கள். நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு, மாலை அருப்புக்கோட்டைக்கு சென்றார்கள்.

**அருப்புக்கோட்டை -** ஜூன் 9 மாலை அருப்புக்கோட்டையில் யோகிராம்சுரத்குமார் பஜனை மண்டலியினரின் இடத்தில், லோக க்ஷேமார்த்தமாக நடைபெற்ற பூமி பூஜையை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே முன்னின்று நடத்தினார்கள். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு குருவருள் பெற்றனர்.

**சேங்கனூர்** ஜூன் 11ஆம் தேதியன்று, சேங்கனூர் கோவிலில் சேங்கனூர் சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரத்தின் வித்யார்த்திகளுடன் ஸ்ரீஸ்வாமிஜி சத்சங்கமாக இருந்தார்கள்.

ஜூன் 12 **வைதீகஸ்ரீ -** நன்னிலம் ப்ரும்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் நடத்தி வரும் வைதீகஸ்ரீ பத்திரிக்கை சார்பில், சென்னை எல்டாம்ஸ் ரோடு தத்வலோகா ஆடிட்டோரியத்தில், சந்தேக நிவாரணி (தார்மீக வாழ்க்கை வாழ வழிமுறைகள்) எனும் ஒளித்தட்டை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தம் திருக்கரங்களால் வெளியிட்டார்கள். மேலும் தர்மசாஸ்திரம் குறித்த போட்டியில் பங்கேற்று, வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கினார்கள். முன்னாள் எலக்க்ஷன் கமிஷனர் திரு.டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், ஸ்ரீகருணாகரராச்சாரியார் ஸ்வாமி மற்றும் ப்ரும்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகளும் பங்கேற்றிருந்தனர். வைதீகஸ்ரீ வெளியிட்டுள்ள தர்மசாஸ்திரத்தின் முக்யத்துவம் மற்றும் சந்தேக நிவாரணி வீடியோ பற்றியும் ஸ்ரீஸ்வாமிஜி பேசினார்கள். சீதாராம குருகுல டிரஸ்ட் நிர்வாகிகளும் வைதீகஸ்ரீ வாலண்டியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

**விரிஞ்சிபுரம்** - ஜூன் 18 மாலை வேலூர் அருகே உள்ள விரிஞ்சிபுரம் கிராமத்திற்கு ஸ்ரீஸ்வாமிஜி சென்றிருந்தார்கள். அங்கு சத்சங்கம் ஒன்றை அழகாக சத்சங்க அன்பர் கோபி ஏற்பாடு செய்திருந்தார். சத்சங்கத்தில் குழந்தைகளும் பெரியவர்களும் உற்சாகமாய் கலந்து கொண்டனர்.

**சோளிங்கர், காஞ்சிபுரம், வாலாஜா, ராணிப்பேட்டை** - ஜூன் 19 காலை - ஸ்ரீஸ்வாமிஜி சோளிங்கர் நரசிம்மர் கோவில் சத்சங்கத்தில் கலந்து கொண்டு மதியம் காஞ்சிபுரம் கீர்த்தனாவளி மண்டபத்திற்கு சென்றிருந்தார்கள். மாலை வாலாஜாபேட்டை பாண்டுரங்கன் கோவிலில் திரளாக கூடி இருந்த அன்பர்கள் முன் ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். தொடர்ந்து அன்றே ராணிப்பேட்டையில் நடைபெற்ற சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள். ராணிப்பேட்டைக்கு செல்லும்பொழுதே மழை நன்றாக வலுத்திருந்தது. "நாம் செய்யப்போகும் நாமகீர்த்தனத்தில் பங்கு கொள்ள வருண பகவான் மகிழ்ச்சி பொங்க முன்னமே வந்துள்ளார்; நம்மை வரவேற்கிறார்" என சொன்ன ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மழையிலேயே அன்பர்களுடன் நாமசங்கீர்த்தனம் வீதிகளில் செய்தார்கள்.

**ஜூன் 20ஆம் தேதியிலிருந்து பெங்களூர்** சுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாக சீதாராம ஹாலில், பகவத்கீதா உபன்யாசம் செய்தார்கள். திரளாக அன்பர்கள் வந்திருந்து, சிரவணம் செய்து குருக்ருபைக்கு பாத்திரமாயினர். விமரிசையான அன்னதானம் அன்பர்களுக்கு, தினமும் ஏற்பாடாகி இருந்தது.


“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83. மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

ஸ்ரீ ஹரி பாபாஜி - 6

அந்த முதியவரிடம் ஸ்வத:ப்ரகாஷ் மஹாராஜ், 'ஐயா! நீங்கள் மிகவும் சோர்ந்து காணப்படுகிறீர்கள். சிறிது நேரம் நிழலில் இளைப்பாரிய பின் செல்லலாம். உமது தலையிலிருந்து கூடையை நான் இறக்கி வைக்கிறேன்' என்று கூறி கூடையை இறக்கி வைத்தார். சிறிது நேர ஓய்விற்கு பின் அந்த குயவன் மீண்டும் தன் பயணத்தை தொடங்க யத்தனித்த போது, அவர், 'இப்போது இந்த கூடையை என் தலையில் ஏற்றிவிடுங்கள். நீங்கள் ஹரிநாமம் சொல்லிக் கொண்டே என்னை பின் தொடருங்கள். உங்கள் வேலையை நான் செய்கிறேன். என் வேலையை நீங்கள் செய்யுங்கள்' என்று கூறினார்.

'இல்லை இல்லை பாபா! நான் எப்படி அவ்வாறு செய்வேன்?' என்று அந்த முதியவர் கேட்டதை பொருட்படுத்தாமல் கூடையை தன் தலைமேல் ஏற்றிக் கொண்டு நடக்கலானார். அவர் பின்னால் மந்திரத்திற்கு கட்டுப்பட்டவன் போல் அந்த குயவனும் நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டே தொடர்ந்தான். ஸிந்தௌலி க்ராமத்தருகே வந்ததும், அவனது தலையில் கூடையை வைத்தவாரே அவனிடம், 'இதோ பாருங்கள் ஐயா! நான் உங்களது பாரத்தை சுமந்தேன். அதற்கு கூலியாக நீங்கள் தினமும் சிறிது நேரம் ஹரி நாம கீர்த்தனம் செய்ய வேண்டும். செய்வீர்களல்லவா? என்று கேட்டார். "நிச்சயமாக செய்வேன் என்று அந்த வயதான குயவனும் ஒப்புக் கொண்டார். அப்பொழுது (பாபாவின் பாவ பூர்ணமான முகமும்) அந்த குயவன் மனதில் ஹரிநாமத்துடன் என்றென்றைக்கும் அகலா வண்ணம் பதிந்தது.

இதுபோல் அவர் ஒருவருக்கு புல் அறுத்துக் கொடுத்து, ஒருவருக்கு விவசாயத்தில் உதவி செய்து, ஒருவருக்கு கிணறு வெட்ட உதவி செய்து, என்று எவ்விதத்திலாவது அவர்களது மனதையும் ப்ராணனையும் தன் வசம் செய்து கொண்டு, பின்

அவர்களிடமிருந்து ஹரிநாம கீர்த்தனம் செய்வதாக வாக்கும் பெற்றுக் கொண்டு விடுவார்.

க்ராம மக்களோடு ஹரிபாபா பல விளையாட்டுகள் விளையாடுவார். இவ்விளையாட்டுகளிலும் கூட ஹரிநாம கீர்த்தனமே ப்ரதானமாக இருக்கும். உதாரணத்திற்கு கபடி ஆட்டத்தின் போது 'கபடி கபடி' என்று கூறுவதற்கு பதிலாக ஹரிநாமம் சொல்லப்படும். மேலும், க்ராம மக்களோடு சேர்ந்து மஹாப்ரபுவின் லீலைகளை அனுகரணம் செய்வார். தானே அதில் மஹாப்ரபுவின் பாத்திரத்தை எடுத்துக் கொள்வார். மஹாப்ரபுவின் ஸந்யாஸ லீலையை அனுகரணம் செய்யும்பொழுது, அவர் அதில் தாதாத்யமத்தை அடைந்து, அன்று இரவே ப்ரபுவை போல் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் யாரும் அறியாத இடத்திற்கு போய்விடுவார். ஹரிபாபாவினுடைய விரஹம் தாங்காமல் அவரை மீண்டும் தங்களிடம் வரச் செய்யும் பொருட்டு, அக்கிராம மக்கள் பல நாட்களுக்கு தொடர்ந்து ஹரி நாம கீர்த்தனம் செய்வார்கள். அப்பொழுது பாபாவும் திரும்பிவிடுவார். மீண்டும் கீர்த்தனம், லீலா அபிநயம், விளையாட்டு என்று ஆரம்பித்துவிடுவார்.

இப்படியாக அந்த இடத்தில் ஹரி நாம ப்ரசாரம் வெகுவாக நடந்தது. அம்மக்களுக்கு நாமத்தில் பெரிதும் நம்பிக்கையும் ச்ரத்தையும் உண்டாயிற்று. ஸந்தோஷமான நேரங்களில் தங்கள் ஆனந்தத்தையும் குதூஹலத்தையும் வெளிப்படுத்தும் விதமாக ஹரிநாம கீர்த்தனம் செய்வார்கள். துக்க காலங்களில் தங்கள் துயரத்தை நிவர்த்தி செய்து கொள்ள நாம கீர்த்தனம் செய்வார்கள். இவ்வாறு எக்காலத்திலும் ஹரிநாம கீர்த்தனமே செய்து வந்ததால் அவர்கள் பல அதிசயங்களை அனுபவிக்கலானார்கள்.

ஒரு முறை அந்த பகுதிகளில் ஒரே வறட்சி. அனாவ்ருஷ்டியின் காரணமாக மக்கள் தவிக்கலானார்கள். அவர்கள் பாபாவை அணுகி, மஹாராஜ்! ஏதாவது செய்யுங்கள். இல்லாவிடில், எத்தனை குடிகள் வீணாகுமோ! எத்தனை உயிர்கள் பலியாகுமோ! சொல்ல முடியாது! என்று ப்ரார்த்தித்தனர்.

(தொடரும்)

## Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology and Diabetes**
**Regn. No 62256**

## ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**
**www.chennaiendocrine.com**

**love is eternal.....we build homes with love**

rk

# radha krishna real estates

## rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**Email:helpdesk@madhuramurali.org**

**Ph: "24895875" SMS '9790707830'**


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**சத்சங்க நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஜூலை 15 & 30 ஆகஸ்டு 14 & 28<br>July 15 & 30 August 14 & 28 |
| ஜூன் 28 | திருவல்லிக்கேணி பாண்டுரங்கன் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி - காலை திருமஞ்சனம், மாலை உபன்யாசம் |
| ஜூலை 6 | சைதன்யகுடீரம் ஜகன்னாதர் ரதோத்ஸவம் |
| ஜூலை 11,12 | யோகிராம்சுரத்குமார் பஜனை மந்திரம் திறப்புவிழா - கூடுவாஞ்சேரி |
| ஜூலை 19 | குருபூர்ணிமா - மதுரபுரி ஆஸ்ரமம்<br>காலை - 8-10 பூஜை; மாலை - உபன்யாசம் |
| ஜூலை 20-29 | அகில பாரத சாம வேத சம்மேளனம் - பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.

Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org எனும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**